**17.06.2025** **அசல் வழக்கு எண்.2/2009** **Starting Time : 12.58 p.m.**

**பி.வா.சா.2 திரு. நடந்தான் த/பெ.செல்லன்.**

**சாட்சிய சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தற்போது கொடியாலத்தில் வசித்து வருகிறேன். வழக்கு சொத்துக்கள் எங்கு உள்ளது என்றால் தெய்யார் எல்லையில் உள்ளது. 2ஆம் பிரதிவாதியை தெரியுமா என்றால் தெரியும். எப்படி தெரியும் என்றால் அவருடைய அம்மா, அப்பா எனக்கு பழக்கம். வாதிகளை தெரியுமா என்றால் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் என்னென்ன விவரங்கள் உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. அதனால் நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் என்ன விவரங்கள் உள்ளது என்று எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் 2ம் பிரதிவாதியின் குடும்ப சொத்தில் நான் விவசாய பணி செய்து வருகிறேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 2ம் பிரதிவாதி யார் என்றால் குணா. நான் பயிர் செய்து வரும் சொத்துக்களின் சர்வே எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்துக்கள் பற்றியும், வாதி, பிரதிவாதிகள் பற்றியும் எனக்கு தெரியும் என கூறியுள்ளபட்சத்தில் தாவா சொத்துக்களின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. எனது முதன்மை வாக்குமூலத்தில் 2ஆம் பிரதிவாதி அவ்வப்போது எங்கள் கிராமத்திற்கு வந்து செல்வார் என்று கூறியுள்ளேன். கிராமத்தின் பெயர் என்ன என்றால் கொடியாலம். தெய்யார் நிலத்திற்கு வந்து செல்வார். எனது முதன்மை வாக்குமூலத்தில் முள்வேலி மரங்களை 2ம் பிரதிவாதி மர வியாபாரிகளுக்கு விற்பனை செய்து அனுபவித்து வந்தார் என்று கூறியுள்ள பட்சத்தில், எந்த சர்வே எண் உள்ள நிலத்தில் மரங்களை எடுத்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி எனது வாக்குமூலத்தில் பாதையையொட்டி இரண்டு பக்கமும் 2ம் பிரதிவாதியின் குடும்ப சொத்துக்கள் உள்ளது என்றும், அந்த சொத்துக்களை யாரும் பயிர் செய்யவில்லை என்று கூறியுள்ளபட்சத்தில் அது யாருடைய சொத்து என்றால் 2ஆம் பிரதிவாதியின் சொத்து. 2ஆம் பிரதிவாதிக்கு தாவா சொத்துக்கள் அல்லாமல் அந்த கிராமத்தில் மொத்தம் எவ்வளவு சொத்துக்கள் இருக்கும் என்றால் 15 ஏக்கர் சொத்துக்கள் இருக்கும். மேற்படி 15 ஏக்கர் சொத்துக்களில் என்ன பயிர் செய்து வருகிறார் என்றால் தெரியாது. வழக்கு சொத்துக்களில் என்ன பயிர் செய்யப்பட்டுள்ளது என்றால் கரம்பாக தான் உள்ளது. வழக்கு சொத்துக்கள் எது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என்னை நீதிமன்றத்திற்கு சாட்சியமளிக்க யார் அழைத்து வந்தார்கள் என்றால் 2ஆம் பிரதிவாதி தான் அழைத்து

வந்தார். இந்த வழக்கு பற்றி எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றும், 2ஆம் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**Ending time :1.15 p.m.**

ஒம்/-செ. மகாலட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.